ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2315/24 - 2023 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2023.01.18

2315/24 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: டிக்/லேன்/02/61

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தில், திக்குவல்லை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 452, வெவுருகன்னல கிராம அலுவலர் பிரிவில், வெவுருகன்னல கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தின் வரைபட இலக்கம் மு. பி. மாறை 2905 ஆம் இலக்க அசல் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட கீழ் வரும் காணித் துண்டு.

**01. துண்டு இலக்கம்: 1**

காணியின் பெயர்: குலுகஹவத்த எனும் தன்கஹ வத்த; விபரம்: பாதை; உரிமை கோருவோர்: பீ. டீ. பீ. முதுகுமாரண, வெவுருகன்னல, திக்குவல்லை, பீ. ஏ. எம். முதுகுமாரண 'ஸுதுவலா', தபகஸ்ஆர, தெமட பிடிய; விஸ்தீரணம்: 0.0071 ஹெக்டயார்.

**02. துண்டு இலக்கம்: 2**

காணியின் பெயர்: குலுகஹவத்த எனும் தன்கஹ வத்த; விபரம்: முட்செடிகள் கொண்ட பிரதேசம் (காடு); உரிமை கோருவோர்: பீ. டீ. பீ. முதுகுமாரண, வெவுருகன்னல, திக்குவல்லை, பீ. ஏ. எம். முது குமாரண 'ஸுதுவலா', தபகஸ்ஆர, தெமடபிடிய; விஸ்தீரணம்: 0.5583 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு திக்குவல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுசன்த அத்தநாயக,
பிரதேச செயலாளர்,
திக்குவல்லை.

பிரதேச செயலகம்,
திக்குவல்லை,
2023, சனவரி 12.

EOG 01 - 0188